2 9 நவ 2013

COMMERCIAL TAXES
29 NOV 2013
CHEPAUK

சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "நவீன சரஸ்வதி சபதம்" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை

அரசாணை (டி) எண்.651

36380

நாள்: 28.11.2013
விஜய, கார்த்திகை,12
திருவள்ளுவர் ஆண்டு, 2044

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக்குழு–4/34501/2013, நாள் 21.11.2013, தேர்வுக்குழு எண். 91/2013–2014.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. வணிகவரி ஆணையர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், "நவீன சரஸ்வதி சபதம்" தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களில் ஓர் அலுவல் சார்ந்த உறுப்பினர் மற்றும் ஓர் அலுவல் சாரா உறுப்பினர் ஆகிய இருவரும் இத்திரைப்படம் கேளிக்கை வரிவிலக்கு பெற தகுதியானது அல்ல எனவும், மற்ற நான்கு உறுப்பினர்கள் இத்திரைப்படம் கேளிக்கை வரிவிலக்கு பெற தகுதியானது எனவும் பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. "நவீன சரஸ்வதி சபதம்" திரைப்படத்தினை பார்வையிட்ட அலுவல் சார்ந்த உறுப்பினர், திருமதி. இசைவாணி, இணை ஆணையர் (வணிகவரி), (செயலாக்கம்–II), சென்னை அவர்கள் தனது பரிந்துரையில், " U சான்றிதழ் பெற்ற திரைப்படம் என்றாலும், ஆபாசம் மற்றும் வன்முறை இல்லாத திரைப்படம் என்றாலும், திரைப்படத்தின் தலைப்பு தமிழில் இல்லாமல் பிற மொழி கலப்பில் உள்ளதாலும், நகைச்சுவை திரைப்படம் என்பதால் பிறமொழி ஆதிக்கம் அதிகமாக உள்ளது என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க தகுதியானது அல்ல " என பரிந்துரை செய்துள்ளார் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர், திரு V.S. ராகவன், பழம் பெரும் நடிகர் அவர்கள், "இத்திரைப்படம் நகைச்சுவைக்காக எடுக்கப்பட்டாலும், நிறைய ஆங்கில வசனம் கொண்டுள்ளதாக இருப்பதாலும், குடி கொடியது என்ற கருத்தைச் சொன்னாலும் அதை நல்ல முறையில் சொல்லி இருக்கலாம் என்பதாலும், இப்படம் கேளிக்கை வரி விலக்குத் தகுதியானது அல்ல" என பரிந்துரை செய்துள்ளார்.

4. இந்நேர்வில், "நவீன சரஸ்வதி சபதம்" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட மேற்கண்ட அலுவல் சார்ந்த உறுப்பினர் திருமதி.க.இசைவாணி, இணை ஆணையர் (வணிகவரி), செயலாக்கம்–II, சென்னை அவர்கள் மட்டும், இத்திரைப்படத்தின் தலைப்பு தமிழில் இல்லாமல் பிறமொழி கலப்பில் உள்ளது என தெரிவித்துள்ளார். ஆனால் அலுவல் சார்ந்த உறுப்பினர் திருமதி க. அன்னை, துணைச்செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை அவர்கள், இத்திரைப்படத்தின் தமிழ் தலைப்பு பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

5. மேற்கண்ட சூழ்நிலையில், "நவீன சரஸ்வதி சபதம்" என்ற திரைப்படத்தின் பெயரிலுள்ள சொற்கள் வழக்கில் உள்ள தமிழ் சொற்கள் என்பதால், கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின், பார்வையிட்ட பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை ஏற்று, தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் பிரிவு 8, உட்பிரிவு 2ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, "நவீன சரஸ்வதி சபதம்" தமிழ் திரைப்படத்திற்கு ஆணையிடப்படும் நாள் முதல் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்புநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா பண்பாட்டு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/11/2013

பிரிவு அலுவலர்.